(இ-ள்) நெருப்பு-நெருப்பினது, அழல்-வெம்மையை, சேர்ந்தக்கால்-சேர்ந்தால், நெய்போல்வதூஉம்- நெய்போலக்குளிர்ச்சியையுடையதும், எரிப்ப-எரிக்கும்படி, சுட்டு-கொளுத்தி, எவ்வம் - துன்பமாகிய, நோய்-நோயை, ஆக்கும்-உண்டாக்கும்,(அதுபோல) கோடாரும்-நன்னடைபிறழாதவர்களும், கடுவினையாராகியார்-கொடியவர்களை, சார்ந்து-சேர்ந்து, கோடி-நன்னடைபிறழ்ந்து, பரப்ப-மிகவும், கொடு-கொடிய, வினையராகுவர்-வினையையுடையவராவார்கள் எ-று (இ-ம்) துன்மார்க்கரைச்சேர்ந்த நன்மார்க்கருந் துன்மார்க்கராவார்களென்பதாம். கோடார்-எ, ஆகுவர்-ப(வீரசோழியமேற்கோள்சூத்திரம்) "காசுநாண்மலர் பிறப்பெனநான்கும் - வெண்பாவீற்றின் மேவும்வாய்பாடே,, இவ்விதியால் இது காசு என்னும்வாய்பாடு (சு)

பெரியவர்கேண்மைபிறைபோலநாளும் ❋
வரிசைவரிசையா நந்தும் - வரிசையால் ❋
வானூர்மதியம்போல்வைகலுந்தேயுமே ❋
தானேசிறியார்தொடர்பு ❋

(இ-ள்) பெரியவர்-பெரியோர்கள், கேண்மை- சிநேகம், பிறைபோல-இளம்பிறைபோல, நாளும்-எந்நாளும், வரிசைவரிசையாய்-கிரமக்கிரமமாக, நந்தும்-வளரும், சிறியார்-சிறியோர்கள், தொடர்பு- சிநேகம், வான்-ஆகாயத்திலே, ஊர்-செல்லும், மதியம்போல-பூரணச்சந்திரன்போல, வைகலும்-தினந்தோறும், வரிசையால்-கிரமமாய், தானே-தனக்குத்தானே, தேயும்- குறைந்துபோகும் எ-று (இ-ம்) பெரியோர்கள்சிநேகம்பிறைபோல்வளரும்சிறியோர்கள்சிநேகம்நிறைசந்திரன் குறைதல்போற்குறையு மென்பதாம். கேண்மை- எ, நந்தும்- ப, தொடர்பு-எ, தேயும்-ப, ஏகாரம்-அசை. (ரு)

சான்றோரெனமதித்துச்சார்ந்தாய்மற்சார்ந்தாய்க்குச் ❋
சான்றாண்மைசார்ந்தார்கணில்லாயிற் - சார்ந்தோய்கேள் ❋
சாந்தகத்துண்டென்றுசெப்புத்திறந்தொருவன் ❋
பாம்பகத்துக்கண்டதுடைத்து ❋

(இ-ள்) சான்றோரென-பெரியோரென, மதித்து-எண்ணி, சார்ந்தாய்-சேர்ந்தவனே, சார்ந்தாய்க்கு - சேர்ந்தவுனக்கு, சான்றாண்மை-பெருந்தன்மை, சார்ந்தார்கண்- நீசேரப்பட்டவரிடத்து, இல்லாயில்-இல்லாவிடில், சார்ந்தோய்-சேர்ந்தவனே, கேள்-கேட்பாயாக, சாந்து-சலவைச்சாந்து, அகத்து-உள்ளிடத்து, உண்டென்று - இருக்கின்றதென்று, செப்பு-செப்பை, திறந்து-திறந்து, ஒருவன்-ஒருவன், அகத்து-உள்ளே, பாம்பு-பாம்பை, கண்டதுடைத்து,கண்டதுபோலும் எ-று ❋ (இ-ம்) நன்மார்க்கருண்டென்றுநீசேரப்பட்டவரிடத்துத் துன்மார்

க்கமுண்டாயிருத்தல் எதுபோலெனில் - ஒருவன் செப்பினுள்ளேசாந்துண்டென்று திறந்துபாம்பைக்கண்டாற்போலு மென்பதாம். ஒருவன்-எ, உடைத்து-ப, தன்மையை-செ, மன்-அசை (அகத்தியச்சூத்திரம்) “முதற்பா முதலடிக் கெழுத்து மொழியிற்-பதின் மூன்றும்பன்னிரண்டும் பசர்வரீற்றடிக் - கெட்டுமேழுங் குற்றுகரமின்றியாம்,, (௬)

யாவரொருவரொருவர்தம்முள்ளத்தைத் *
தேருந்துணைமையுடையவர் - சாரற் *
கனமணிநின் றிமைக்கு நாட கேண்மக்கள் *
மனம்வேறுசெய்கையும்வேறு *

(இ-ள்) சாரல்-(மலைச்)சாரலிலே, கனம்-பொன்னும், மணி-அரதநங்களும், நின்று-இருந்து, இமைக்கும்-பிரகாசிக்கும், நாட- நாட்டையுடையபாண்டியனே, கேள்-கேட்பாயாக, மக்கள்- மனிதர்கள், மனம்-மனத்திலெண்ணுவதும், வேறு-வேறு, செய்கையும்- நடக்கையும், வேறு-வேறு (ஆதலால்) ஒருவர்- ஒருவர், ஒருவர்தம் - மற்றொருவர்தமுடைய, உள்ளத்தை - மனதை, தேரும் - அறியும், துணைமையுடையவர்- அளவினையுடையவர், யாவர்-யாவர்—எ-று * (இ-ம்) பாண்டியனே ஒருவர் மனதை மற்றொருவரறியா ரென்பதாம். உடையவர் - எ, யாவர்-ப. (எ)

உள்ளத்தானள்ளா துறுதித்தொழிலராய்க் *
கள்ளத்தானட்டார்கழிகேண்மை - தெள்ளிப் *
புனற்செதும்புநின் றலைக்கும்பூங்குன்றநாட *
மனத்துக்கண்மாசாய்விடும் *

(இ-ள்) தெள்ளி-மணிகளைக்கொழித்து, புனல் - அருவிநீரானது, செதும்புநின்று-சேறுபொருந்தி, அலைக்கும்-ஒதுக்கும், பூ - அழகிய, குன்றம்-மலையையும், நாட- நாட்டையுமுடையபாண்டியனே, உள்ளத்தால்-மனதால், நள்ளாது-சிநேகியாது, உறுதித்தொழிலராய் - பலம்பொருந்தியசெய்கையையுடையராய், கள்ளத்தால் - வஞ்சகத்தால், நட்டார்- சிநேகித்தவரது, கழி- மிகுந்த, கேண்மை-சிநேகம், மனத்துக்கண்-மனதினிடத்தில், மாசாய்விடும்-குற்றமாய்விடும் எ-று * (இ-ம்) பாண்டியனே மனங்கலந்து உறவுசெய்யாது வஞ்சகமாக வுறவுசெய்தல் மனத்திடத்திற்குற்றமா மென்பதாம். கேண்மை-எ, மாசாய்விடும்-ப. (அ)

ஒக்கியவொள்வாடன்றெவ்வர்கைப்பட்டக்கா *
லூக்கமழிப்பதூஉமெய்யாகு - மாக்க *
மிருமையுஞ்சென்றுசுடுதலானல்ல *
கருமமேகல்லார்கட்டீர்வு *

(இ-ள்) ஒக்கிய-ஒக்கிய, ஒள்-ஒளிபொருந்திய, வாள்- (நல்)வாளாயுதம், தன்றெவ்வர்-தன்சத்துருக்கள், கை-கையில், பட்டக்கால்-அ

(இ-ள்) ஒண்-ஒள்ளிய, கதிர்-கிரணங்களையுடைய, வாள்-பிரகாசிக்கும், மதியம்-சந்திரனை, சேர்தலால்-அடைதலால், ஓங்கிய-உயர்ந்த, அம்-அழகிய, கண்-இடமுடைய, விசும்பில்-ஆகாயத்துள்ள, முயலும்-முசலும், தொழப்படூஉம்-வணங்கப்படும், (அதுபோல) குன்றிய-குறைந்த, சீர்மையராயினும்-சிறப்புடையவராயினும், குன்றனார்-மலைநிகர்பெருமையோர், கேண்மை-சிநேகத்தை, கொளின்-கொண்டால், சீர்பெறுவர்-சிறப்படைவர் — எ-று. * (இ-ம்) சந்திரனைச்சேர்ந்தகளங்கமுந் தொழப்படும் அதுபோல பெரியோரைச்சேர்ந்தசிறியோருஞ் சிறப்படைவரென்பதாம். கேண்மைகொள்பவர் - தோன்றாவெழுவாய், பெறுவர்-பயனிலை-செ. (௬)

பாலோடளாயநீர்பாலாகுமல்லது *
நீராய்நிறந்தெரிந்துதோன்றாதாந்-தேரிற் *
சிறியார்சிறுமையுந்தோன்றாதாநல்ல *
பெரியார்பெருமையைச்சார்ந்து *

(இ-ள்) பாலோடு-பாலுடன், அளாய-கலந்த, நீர்-நீரானது, பாலாகும்-பால்போலாம், அல்லது-அல்லாமல், நீராய்-நீர்போலாய், நிறம்-நிறம், தெரிந்து-விளங்கி, தோன்றாது-தெரியாது, (அதுபோல) தேரில்-ஆராயில், நல்ல-நல்ல, பெரியார்-பெரியோர், பெருமையை-பெருந்தன்மையை, சார்ந்து-சேர்ந்து, சிறியார்-சிறியோருடைய, சிறுமையும்-(பெருந்தன்மை)யின்மையும், தோன்றாது-தெரியாது — எ-று. * (இ-ம்) பாலைச் சேர்ந்தநீரும்பால்போலாம் அதுபோல் பெரியோரைச் சேர்ந்த சிறியோரிழிவுந்தோன்றா தென்பதாம். சிறுமை-எ, தோன்றாது-ப, ஆம்-இரண்டும் அசைகள். (௭)

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைந்தபுல் *
லொல்காவேயாகுமுழவருழுபடைக்கு *
மெல்லியரேயாயினுநற்சார்வுசார்ந்தார்மேற் *
* செல்லாவாஞ்செற்றார்சினம் *

(இ-ள்) கொல்லை-கொல்லையில், இரும்-பெரிய, புனத்து-புனத்திலே, குற்றி-மரக்கட்டையை, அடைந்த-சேர்ந்த, புல்-புல்லானது, உழவர்-பயிர்செய்வோர், உழு-உழுகிற, படைக்கு-கலப்பைக்கு, ஒல்காவாம்-அசையாவாம், (அதுபோல) மெல்லியராயினும்-மெல்லியவராயினும், நற்சார்வு-நல்லசார்வை, சார்ந்தார்மேல்-சேர்ந்தவரிடத்து, செற்றார்-பகைவருடைய, சினம்-கோபங்கள், செல்லா-செல்லமாட்டாவாம் — எ-று. * (இ-ம்) மரக்கட்டையைச்சார்ந்தபுல் கலப்பைக்கசையாது அதுபோல வலியாரைச்சார்ந்த மெலியாரிடத்துப் பகைவர்கோபஞ்செல்லா தென்பதாம். சினம்-எ, செல்லா-ப, ஏ-இரண்டும் ஆம் ஒன்றும் அசைகள். (௮)

---

*இலக்கணத்திரட்டு)க்கு- "ஆவென்விகுதி பன்மையுற்றெதிர்மறை,,

(இ-ள்) உணர்விலார்-அறிவில்லார்—ஓதியும்-(பலநூலைப்) படித்தும்—ஓதார்-படியாதாராவர்—உணர்வுடையார்-அறிவுடையார்—ஓதாதும்-படியாதிருந்தும்—ஓதியனையார்- படித்தவராவர்—இரவாதார்-யாசியாதவர்—தூய்தாக- பரிசுத்தமாக—நல்கூர்ந்தும்- தரித்திரப்பட்டிருந்தும்—செல்வர் - செல்வராவார்கள்—செல்வரும்- செல்வமுடையாரும்—ஈயாரெனின்-கொடாராகில்—நல்கூர்ந்தார்- தரித்திரராவர்—எ-று* (இ-ம்) அறிவிலார்படித்தும்படியாதவரே அறிவுடையார்படியாதிருந்தும் படித்தவரே இரவாதார்வறுமையடைந்துஞ்செல்வர்களே - செல்வருங்கொடாராகில் வறியவர்களேயென்பதாம். உணர்விலார்-உணர்வுடையார்-இரவாதார்-செல்வர்-எழுவாய், ஓதார்- ஓதியனையார்-செல்வர்-நல்கூர்ந்தார்- பயனிலை. (௰)

நன்றியில்செல்வ முற்றுப்பெற்றது.

௨அ-ஆம்-அதிகாரம்.

## ஈயாமை.

[அஃதாவது- கொடாமலிருக்குந்தன்மையாம்]

நட்டார்க்குநள்ளா தவர்க்குமுளவனாய *
லட்டதுபாத் துண்ட லட்டுண்டல் - லட்ட *
தடைத்திருந் துண்டொழுகு மாவதின்மாக்கட் *
கடைக்குமாமாண்டைக்கதவு *

(இ-ள்) அட்டுண்டல்- சமைத்துண்டுவாழ்தலாவது—நட்டார்க்கும்-சிநேகர்க்கும்—நள்ளாதவர்க்கும்-சிநேகியாதவர்க்கும்—உள- (தமக்)குள்ள—வனாயால்-அளவால்—அட்டது-சமைத்ததை—பாத்துண்டல் பகுத்துண்ணல்—அட்டது- சமைத்ததை—அடைத்திருந்து-(கதவை)யடைத்திருந்து—உண்டு-புசித்து—ஒழுகும்-நடக்கும்—ஆவது-செல்வம்—இல்-இல்லாத—மாக்கட்கு-மனிதர்க்கு—ஆண்டைக்கதவு-சுவர்க்கவாயிற்கதவுகள்—அடைக்கும்- அடைத்திருக்கும்—எ-று* (இ-ம்) சிநேகருக்குஞ் சிநேகியாதவருக்கும் இருக்குமளவாயிட்டுண்ணுதலேயுண்ணுதலாம். இட்டுண்ணாதவர்க்குச் சுவர்க்கவாயிற்கதவுகளடைக்குமென்பதாம். அட்டுண்டல்-எ, பாத்துண்டல்-ப, கதவு-எ, அடைக்கும்-ப, ஆம்-அசை. (௧)

எத்துணையானு மியைந்தவளவிற் *
சிற்றறஞ்செய்தார்தலைப்படுவர்- மற்றைப் *
பெருஞ்செல்வமெய்தியக்கார்பின்னறிகுமென்பா
ரழிந்தார்பழிகடலத்துள்

மாம், பாவமும்பழியும்பலநாளுந் துன்பமாம் என்பதாம். சான்றவர்-எ, செய்கலார்-ப, வருவ-செ, ஐ-சாரியை (௬)

மல்லன்மாஞாலத்து வாழ்பவருளெல்லாஞ் ❋
செல்வரெனினுங்கொடாதவர்-நல்கூர்ந்தார் ❋
நல்கூர்ந்தக்கண்ணும் பெருமுத்தரையரே ❋
செல்வரைச்சென்றிரவாதார் ❋

(இ-ள்)மல்லல்-வளப்பமுடைய, மாஞாலத்து-பெரியவுலகத்து, வாழ்பவருளெல்லாம்- வாழ்பவரெல்லாருள்ளும், செல்வரெனினும்- செல்வமுள்ளவராயினும், கொடாதவர்-கொடாதவர், நல்கூர்ந்தார்- தரித்திரமுடையவரே, நல்கூர்ந்தக்கண்ணும் - தரித்திரமடைந்தும், செல்வரை-செல்வமுடையாரிடத்து, சென்று-போய், இரவாதார்- யாசியாதவர், பெருமுத்தரையரே- பரிசுத்தமுடையவரே—எ-று❋(இம்)செல்வர்களாகினுங்கொடாதவர்கள் தரித்திரர்களே, தரித்திரப்பட்டு மிரவாதவர்கள்செல்வமுடையவர்களே என்பதாம். கொடாதவர்-எ, நல்கூர்ந்தார்-ப, இரவாதார்-எ, பெருமுத்தரையர்-ப (௯)

கடையெலாங் காய்பசி யஞ்சுமற்றேனை ❋
யிடையெலாமின்னாமையஞ்சும், புடைபரந்த ❋
விற்புருவவேனெடுங்கண்ணாய்தலையெலாஞ் ❋
சொற்பழியஞ்சிவிடும் ❋

(இ-ள்)புடை - பக்கங்களில், பரந்த- பரவியிருக்கின்ற, வில்-வில்லொத்த, புருவ- புருவங்களையும், வேல்-வேலொத்த, நெடும்-நீண்ட, கண்ணாய்-கண்களையுமுடையவளே, எல்லாம்-முற்றும், கடை-கடையானவன், காய்-வருத்தும், பசி-பசிக்கு, அஞ்சும்- பயப்படுவான், ஏனை-ஒழிந்த, எலாம்-முற்றும், இடை - இடையானவன், இன்னாமை-துன்பத்திற்கு, அஞ்சும்-பயப்படுவான், எலாம்-முற்றும், தலை- தலையானவன், சொற்பழி-சொற்குற்றத்திற்கு, அஞ்சிவிடும்- பயப்படுவான்—எ-று❋(இம்) பெண்ணே கடையானவன் பசிக்கஞ்சுவான் இடையானவன் துன்பத்திற்கஞ்சுவான் தலையானவன்சொற்குற்றத்திற்கஞ்சுவானென்பதாம். கடை - இடை - தலை- எ, அஞ்சும்-ப, மற்று இடைச்சொல். [❋நன்னூல் "பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற்-செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே" இவ்விலக்கணமறியாது செய்யுமென்னும்வாய்பாட்டுவினைமுற்றைப் பல்லோர்படர்க்கைக் குறையிட்டவர் விதியறியார்போலும்] (எ)

நல்லர்பெரிதளியர் நல்கூர்ந்தாரொன்றெள்ளிச் ❋
செல்வர்சிறுநோக்குநோக்குங்கால், கொல்ல ❋
லுலையூதுந்தீயேபோலுங்கனலுங் ❋கொல்லோ ❋
தலையாயசான்றோர்மனம். ❋

---

(அகத்தியம்) "கொல்கருமன்றொழி லசைநிலையாம்"

லேன் - என்மகள் காட்டுவழிச் சென்றாள்போலும் என்பதாம்- யான்- தோன்றா எழுவாய், அறியேன்-பயனிலை. (௯)

கண்மூன் றுடையானுங்காக்கையும்பையரவு *
மென்னீன் றவாயும்பிழைத்ததென் - பொன்னீன்ற *
கோங்கரும்பன்னமுலையாய்பொருள்வயிற் *
பாங்கனார்சென்றநெறி *

(கருத்து) தலைமகள்- பிரிவாற்றாமையைத்- தோழிக்குச் சொல்லியது.
(இ-ள்) பொன்னீன்ற- பொன்போலு நிறமுடைய— கோங்கரும்பன்ன- கோங்கரும்புக்கொப்பான— முலையாய்- கன தனங்களையுடைய தோழியே— பொருள்வயின் - பொருள்வயிற்பிரிந்த— பாங்கனார் சென்றநெறி - தலைவர் சென்றவழிக்கு— கண்மூன்றுடையானும்- மூன்றுகண்களையுடைய பரமசிவனும்— காக்கையும்- காகமும்— பையரவும்- படமுடைய சர்ப்பமும்— என்னீன்ற - என்னைப்பெற்ற— ஆயும்- தாயும்— பிழைத்ததென்- எனக்குப்பிழைசெய்தது— ஏ-று* (இ-ம்) தோழியே-தலைவர்பொருள்மேற்பிரிந்தவழிக்கு எனக்குப்பிழை செய்தது மன்மதனையுருவழித்துப் பின்னுமுயிராக்கிவிட்ட சிவனும், குயிலைவளர்த்துவிட்ட காகமும், சந்திரனை விழுங்கிவிட்ட பாம்பும், பெற்றகாலத்தே தன்னைக் கொல்லாதுவிட்ட தாயுந்தான் என்றாள் என்பதாம்.— கண்மூன்றுடையான்- காக்கை-அரவு-ஆய்- எழுவாய்; பிழைத்தது- பயனிலை. (௰)

காமத்துப்பால் முற்றிற்று

ஆக பால்-௩-க்கு-அதிகாரம்-௪௰-க்கும்-கூடிய செய்யுள்—௪௱.

நாலடியாருக்கு, களத்தூர்-தமிழ்ப்புலவர்

## வேதகிரிமுதலியாராற் செய்யப்பட்ட

பதவுரையுங் கருத்துரையும்
முற்றுப்பெற்றது.

## இஃது.

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்க எழுத்துப்பிழைமாத்திரம்
மேற்படி - புலவர் - குமாரர்
சுப்பராயமுதலியாராலொருவாறு பரிசோதித்து
நிறைவேறியது.